**MCOP NO:7206/2024 &7291/2024 (Joint trial) DATE: 13.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு.ஜார்ஜ் (**எம்சிஓபி எண்.7206/2024**)

த.பெ : திரு.பாக்கியநாதன்

வயது :71

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் **1969**ன் பிரிவு **6**ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று **13.07.2026**ல் பதிவு செய்யப்பட்டது,

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுதாரர் தரப்பு ஆவேன், என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ **1** முதல் **10** வரை தாக்கல் செய்கிறேன், மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்,

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது, விபத்தின்போது அது தொலைந்துபோய்விட்டது. **எனக்கு விபத்தின்போது ஓட்டுநர் உரிமம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் தொலைந்தது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. உண்மையிலேயே நான் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்று அது தொலைந்திருந்தால் அதுபற்றி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு புகார் கொடுக்காத சமயத்தில் நான் ஓட்டுநர் உரிமமே பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து அடிப்பட்ட உடன் ராதா ராஜேந்திரன் மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு சேர்ந்த மறுநாள் தான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். நான் மருத்துவமனையில் முதல் நாள் சேர்க்கப்பட்டு அடுத்தநாள் விடுவிக்கப்ப்ட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு அறுவை சிகிச்சை செய்யவிில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டதால் தான் நான் மறுநாளே மருத்துமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரிக்கை பத்தி 3, 4, 5, 9, 10 ஆகியவை வழக்கிக்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தொழில், வருமானம் குறித்த எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. என்னை இடித்த ஆட்டோ ஓட்டுநருக்கு விபத்து நேரத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.